மதிப்பிலான ஜவுளி வர்த்தகமும், சுமார் 6,000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கப்பெற்றுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**40—**

**பணிமனை**

***421—திரு. என். முருகுமாறன்:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், காட்டுமன்னார்கோவிலில் போக்குவரத்துப் பணிமனை துவக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், காட்டுமன்னார்கோவிலில் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க, மேற்படி வட்டம், உடையார்குடி கிராமத்தில் தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்குச் சொந்தமான மொத்த இடத்தின் ஒரு பகுதியில், அதாவது 2.00 ஏக்கர் நிலம், வக்ஃபு வாரியத்தின்மூலம் அணுகுபாதை ஏற்படுத்தி நிலம் ஒப்படைப்புச் செய்யப்பட்டவுடன் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று பணிமனை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

**திரு. என். முருகுமாறன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளல் பேகன், வான்புகழ் பாரி, வல்வில் ஓரி,*

*2011 ஆகஸ்ட் 16]*

*மலையமான் திருமுடிக் காரி, வள்ளல் நள்ளி, ஆய் அண்டிரன், வள்ளல் அதியமான் ஆகிய ஏழு கடையேழு வள்ளல்களையடுத்து, எட்டாவது வள்ளலாக இருக்கிற புரட்சித் தலைவர், பொன்மேனித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய கலவையாக, ஒன்பதாவது வள்ளலாக நம் கண் முன்னே கொலுவீற்றிருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனிதப் பொற்பாதங்களில் என்னுடைய பணிவான வணக்கத்தை நான் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*தாயே! அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய காட்டுமன்னார்கோவில் முதல் சட்டப் பேரவை உறுப்பினர் என்கின்ற வரலாற்றுப் பெருமையை எனக்குத் தந்திருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே, உங்களுடைய புனிதப் பொற்பாதங்களில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். காட்டுமன்னார்கோவில் தொகுதிவாழ் மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தந்திருக்கிற நல்ல அற்புதமான தலைவியே, காட்டுமன்னார்கோவில் தொகுதிவாழ் மக்கள் 31,795 வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றி பெறச் செய்த காட்டுமன்னார்கோவில் தொகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று உங்கள் பாதமலர்களிலே பணிவோடு கேட்டு விடைபெறுகிறேன், நன்றி.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோவில் வட்டம், உடையார்குடி கிராமத்தில் வக்ஃபு வாரியத்திற்குச் சொந்தமான 7.2 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் 103 சர்வே எண்ணில் 2 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு 40 அடி அகலம் உள்ள அணுகுபாதை வசதியுடன் பணிமனை அமைக்க ஆரம்பக் குத்தகைக் காலம் மூன்று வருடங்களுக்குக் குத்தகை நீட்டிப்பு வசதியுடன் மாத வாடகை ரூ.8,000, வாடகை முன்பணம் ரூபாய் ஒரு இலட்சம் என ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலத்தை குத்தகை அடிப்படையில் ஒப்படைப்பு செய்வதற்காக மேற்படி நிலத்தில் சுத்தம் செய்யும் பணியை மேற்கொண்டபோது, சில தனியார் நபர்களால் பணிகள் நிறுத்தப்பட்டதாகவும், இதுகுறித்த தகவல்கள் சென்னை வக்ஃபு*

வாரிய முதன்மைச் செயல் அலுவலருக்குத் தெரிவிக்கப்பட்டு, இந்நிலத்தில் பணிமனை அமைக்க ஒப்படைப்பு செய்யும்படியும் கோரப்பட்டுள்ளது. நிலம் ஒப்படைப்பு செய்யப்பட்டவுடன் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று பணிமனை அமைக்கும் பணி விரைவில் துவக்கப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**41—**

### விமான வசதிகள்

***1808—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

*மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழகத்திலிருந்து ஹஜ் செல்வோர் வசதிக்காக மதுரையிலிருந்து விமானங்கள் இயக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறைவன் அருளால் மிக, மிகச் சாதாரண குடும்பத்தில் பிறந்து, ஓர் ஆரம்பப் பள்ளி ஆசிரியரின் மகனாக வளர்ந்து, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அருளால் இராணிப்பேட்டை நகரின் வட்டச் செயலாளராகவும், நகரச் செயலாளராகவும், வேலூர் கிழக்கு மாவட்ட சிறுபான்மையினர் நலப் பிரிவின் செயலாளராகவும் ஆகி, புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தமிழ்நாடு மாநில ஹஜ் குழு உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டு, இன்று இராணிப்பேட்டை தொகுதியின் வேட்பாளராகியுள்ளேன். கடுமையான கோடை வெயிலிலும் எனக்காக பிரச்சாரம் செய்து, உதவி செய்து, என்னை சட்டமன்ற உறுப்பினராக்கி, மாண்புமிகு அம்மா அவர்களின்